Scanned by CamScanner

தன் விவரக் குறிப்பு

பெயர்	:	**கோ. இளவழகன்**
பிறந்த நாள்	:	3.7.1948
பெற்றோர்	:	அ. கோவிந்தசாமி, அமிர்தம்
குடும்ப நிலை	:	இ. வளர்மதி (மனைவி) முனைவர் இ. இனியன் (மகன்) தொல்லியல் துறை (Archaeology) முனைவர் இ. தமிழமுது (மகள்) உயிரிதொழில்நுட்பவியல் (Bio - Technology)
பிறந்த ஊர் முகவரி	:	உறந்தைராயன்குடிக்காடு உரத்தநாடு வட்டம் தஞ்சாவூர் மாவட்டம் - 614 625 தமிழ்நாடு, இந்தியா.
தற்போதைய முகவரி	:	2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர் சென்னை- 600 017.
கல்வித் தகுதி	:	கல்லூரிப் புகுமுக வகுப்பு
இனம்	:	பிற்படுத்தப்பட்டோர்
தற்போதைய தொழில்	:	நல்ல தமிழ் நூல்களைத் தேடி எடுத்து தொடர்- தொடராக வெளியிட்டுத் தமிழ்நூல் பதிப்பில் தனிமுத்திரை பதித்து வருபவர்

ஆற்றியுள்ள பொதுப்பணிகள்

1965இல் பள்ளி மாணவராக இருந்தபோது மொழிப்போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றுத் தளைப்படுத்தப் பெற்று 48 நாள்கள் சிறையில் இருந்தவர்.

பிறந்த ஊராகிய உறந்தைராயன் குடிக்காட்டில் **'ஊர்நலன் வளர்ச்சிக் கழகம்'** எனும் சமூக அமைப்பில் இருந்து ஊர் நலப்பணி ஆற்றியவர்.

உரத்தநாட்டில் **'தமிழர் உரிமைக் கழகம்'** என்னும் அமைப்பை நிறுவித் தமிழ்மொழி, தமிழின மேம்பாட்டிற்கு உழைத்தவர். பாவாணர் படிப்பகம் நிறுவி இளம் தலைமுறைக்குத் தமிழ்த் தொண்டாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவின் மதுவிலக்குக் கொள்கையை நெஞ்சில் ஏந்தி உரத்தநாடு மதுவிலக்குக் குழுவின் முக்கிய அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து செயலாற்றியவர். 1975-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் **'உரத்தநாடு திட்டம்'** என்று பாராட்டப் பெற்ற மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற உழைத்தவர்.

தமிழ்மண் பதிப்பகத்தை நிறுவி, புழக்கத்தில் இல்லாத அரிய பழந்தமிழ் நூல்களையும், புதிய படைப்பு இலக்கியங்களையும் தமிழின மேன்மைக்கு வித்திட்டச் சான்றோர்களின் நூல்களையும் தேடி எடுத்து பொருள்வழிப் பிரித்து, கால நிரலில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் படித்துப் பயன் கொள்ளும் வகையில் உலகெங்கும் தமிழர்களுக்குத் தமிழ்க்கொடையாக வழங்கி வருபவர். தமிழின் அறிவுக் கருவூலங்களைத் தேடி எடுத்து தொகுதி தொகுதிகளாக ஒருசேர வெளியிட்டு **"கருவி நூல் பதிப்பகம்"** என்று கூறும் அளவிற்கு தமிழ்நூல் பதிப்பில் தனிமுத்திரைப் பதித்து வருகிறது.

பொதுநிலை

தமிழர் தலைவர் தந்தை பெரியார், தமிழர் மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர் பேரறிஞர் அண்ணா, தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள், மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோரை முன்னோடிகளாகக் கொண்டு அவர்களின் கொள்கைகளை நிறைவேற்ற அயராது உழைத்து வருபவர்.

Scanned by CamScanner

தமிழ்மண் பதிப்பகம்

பதிப்பகம் என்னும் அருமைப் பெயர் அண்மைக் காலத் **தனித்தமிழ்க் கொடை**. அதிலும் 'தமிழ்மண் பதிப்பகம்' என்னும் அருமைக் கொடைஞர் **கோ. இளவழகனார்** குறுகிய கால அளவில் பெருகிய தொண்டுசெய்தலில் பிறங்குகின்றார்.

கையில் அடங்காப் பருமன், கருத்தில் அடங்கா விரிவு, வாங்குவார் அரிய இசை நூல், ஆபிரகாம் பண்டிதரின் **கருணாமிர்த சாகரத்தை** வெளியிட எவரால் முடியும்? அப்பதிப்பின் இழப்பை எவரால் தாங்க முடியும்?

தாங்கி நின்ற இளவழகர், ஏங்கிவிடவில்லை! தூங்கியும் விடவில்லை! துடிப்போடு கடமையில் கிளர்ந்தார்! ஐம்பான் ஆண்டு அயரா உழைப்பில் உருவாகி ஒவ்வொன்றாக வெளிவந்த ஐம்பான் நூலுக்கு (ஐம்பதுக்கு) மேற்பட்ட **பாவாணத் தொகுதிகளை** ஒட்டுமெத்தமாக வெளியிட்ட பெருமை அவர்க்கு உண்டு. மலர்களினும் இதழ்களினும் தொக்கிக் கிடந்த படைப்புகளைத் திரட்டி மலர்மாலைத் தொடையலாக்கிய பெருமையும் அவர்க்கு உண்டு. **பன்மொழிப் புலமையர் கா. அப்பாத்துரையாரின்** நூற்றுக்கு மேற்பட்ட ஊற்றுக்கண் அன்ன படைப்புகளை, ஒருங்கே வெளியிட்ட பெருமையும் அழகர்க்கு ஆயிற்று.

ஒல்காப் புலமைத் தொல்காப்பியப் பதிப்புகள் அங்குமிங்குமாய் இருநூற்றாண்டளவில் பல்வேறு பதிப்பகங்கள் வெளியிட்ட பதிப்புகள் அனைத்தையும் **(இளம்பூரணம், நச்சினார்க்கினியம், பேராசிரியம், சேனாவரையம், தெய்வச்சிலையம், கல்லாடம்)** வாழ்வியல் விளக்கத்துடன் ஒருங்கே வெளியிட்ட பெற்றிமையும் இளவழகர்க்கு உண்டு.

ஈழத்துப் பேரறிஞர் தமிழ்மொழி இன மேம்பாட்டுச் சீர்மைக்கே வாழ்ந்த பெருமையர் **ந.சி. கந்தையா** அவர்களின் அரிய நூல்களையெல்லாம் ஒருங்கே தமிழ் கூறும் உலக வளமாக ஆக்கிய படைப்புப் பேறும் இளவழகர்க்கு உண்டு.

அம்மட்டோ! பாவாணர் அறக்கட்டளை நிறுவிய தோன்றல் சிங்கைப் பெருமகனார் வெ. கரு. கோவலங்கண்ணனார் விருப்பப்படி, அவ்வறக்கட்டளை வெளியீடாக 4600 பக்க அளவின் தேவநேயத்தை 14 தொகுதிகளாக அருமையாய் அச்சிட்டு வழங்கிய - சீரிய செந்தமிழ்த் தொண்டர் இளவழகர் ஆவர்.

திரு.வி.க. நூல்கள் நாட்டுமைமை ஆக்கப்பட்டதன் பயன்பாட்டால் அவர்தம் நூல்கள், கட்டுரைகள் ஆகிய அனைத்துப் படைப்புகளும் **'திரு.வி.க. தமிழ்க் கொடை'** என்னும் வரிசையில் தனிப்பெருஞ் சீரிய பதிப்பில் ஒருமொத்தமாக வழங்கும் பெருமையைக் கொள்பவர் தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ. இளவழகனார் ஆவர்.

நாவலர் நாட்டார் தமிழ் உரைகள், அப்பாத்துரையார் நூல்கள், இராகவனார் நூல்கள், ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுகள், அகராதிப் பதிப்புகள், மறைமலையம் எனத் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டு, அவ்வெளியீட்டுத் துறையின் வழியே தமிழ்மொழி, தமிழின மீட்சிப் பணிக்குத் தம்மை முழுவதாக ஒப்படைத்துப் பணியாற்றும் இளவழகனார் திரு.வி.க. தமிழ்க் கொடைத் தொகுதிகளை வெளியிடுதல் தமிழகம் பெற்ற பெரும் பேறேயாம். வாழிய அவர்தம் தொண்டு! வாழியர் அவர்தம் தொண்டுக்குத் துணையாவார்!

எம் எழுபத்தைந்தாம் அகவை நிறைவு நூல் வெளியீட்டில் சிறக்கத் தேர்ந்து முன்னை நூல்கள் பதினைந்துடன், பின்னை நூல்கள் அறுபத்தைந்து இணைத்து 75ஆம் அகவையை **எண்பது நூல்** வெளியீடாகச் செய்த பெற்றிமை இளவழகர்க்கே உரியதாகும்!

- இரா. இளங்குமரன்

Scanned by CamScanner

இன்னும் என்ன?
எத்தனை எத்தனை அகராதிகள்!
எத்தனை எத்தனை சொற்பொருட்களஞ்சியங்கள்!
எத்தனை எத்தனை கருவி நூல்கள்!,
துறை நூல்கள் வெளியீட்டில் ஊன்றியுளார்
திருவாளர் இளவழகர்!
வெள்ளப் பெருக்கெனத் தாவும்
உள்ளம் அவர் உள்ளம்!
அவ்வுள்ளப் பெருக்கில் ததும்பி வழிய
இருக்கும் கொடைகளோ, தமிழ்மொழி -
இன - பண்பாட்டு மீட்டெடுப்புக் கருவி
நூல்கள்! புற்றீசல் நூல்கள் அல்ல!
பொற்றாளாய்ப் போற்றிக் காக்கத் தக்க
புகழ்வாழ்வு நூல்கள்!
காலாயிரம் நூல்களைப் படைத்த பின்னர்
என்னால் கண்டு கொள்ளப்பட்ட இளவழகனார்
பல்ல பல காலம் எழுத்துப்படியாகச்
சிதறிக்கிடந்த நூல்கள், பளிச்சிடு
பதிப்பில் ஓராண்டில் இலங்கச் செய்து
விட்ட அவர், என்னிடம் இயற்றித் தர வேண்டியுள
நூல்களோ, என் வாழ்வும் படைப்பும்
எவ்வளவு நீடினும் அவ்வளவும் போதா
என்று. வியப்பும் விம்மிதமும் உண்டாக்கி
உவகைத் துள்ளலை முதுமையிலும்
உண்டாக்குகின்றதாம்.

உள்ளம் கவரும் உழைப்புத் தோன்றல்
தமிழன்னை தவப்பேற்றால் வாய்த்த
தமிழ்மகன், திருமலி கோ. இளவழகன்
வாழ்வும் வளமும்
தமிழ்வாழ்வும் தமிழ்வளமுமேயாம்.

-இரா. இளங்குமரன்

Scanned by CamScanner

பதிப்பரசர் எங்கள் படை!

சீர்சால் தமிழ்நூல்கள் செல்லரித்தல் கண்டோடி
ஓர் தமிழர் நூல்கள் உயிர்ப்பித்தார்!
ஆருயிராய்
வந்தார்.... தமிழ் தழைக்க வாழ்ந்தார்! இளவழகன்
தந்தார் இனிய தமிழ்!

என்னே இளவழகன் சீர்த்தி! எமை நிமிர்த்தும்
பன்னூறு நூல்கள் இவர் பதித்தார்!
பின்னால்
வருந்தமிழர் வாழ்வு கருதிஇவர் வாழ்ந்தார்!
அருந்தமிழின் காவல் அரண்!

ஊரோடிச் சேர்த்த தமிழை உணவாக்கித்
தீராத் தமிழர் பசி தீர்த்தார்!
பேராற்றல்
கொண்டார் இளவழகன்! கோலத் தமிழ்வாழக்
கண்டார் பதிப்புக் கலை!

தன்னுயிர் வாட்டி எழிலார் தமிழ்த் தாயின்
இன்னுயிர் மீட்டார் இளவழகன்!
மன்னிய தன்
நோய் கருதார்! மேனி நொடிதல் இவர் கருதார்!
தாய் கருதிச் செய்தார் தவம்!

நின்றார் தழலாய்! இளவழகன் நீறுபகை
என்றார் தமிழின் பகை எரித்தார்!
வென்றார்!
மதிப்பின் தமிழ்காத்தார்! மானமே காத்தார்!
பதிப்பரசர் எங்கள் படை!

- காசி ஆனந்தன்

Scanned by CamScanner

கருவிநூல் பதிப்பகம்

தமிழ்மண் பதிப்பகம் வெளியிடும் நூல்கள் எவ்வாறும் கருவி நூல்களாகவே இருத்தல் செயற்கரிய செய்யும் செழும் செயலாம்.

தமிழ்மண் பதிப்பகம் என்னும் தன் பெயருக்கு ஏற்பத் தமிழ் மண்ணுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழினத்திற்கும் அரணாக அமையும் நூல்களை மட்டுமே தேர்ந்தெடுத்து வெளியிடுதலைத் தன் தொடக்க நாள் முதலே கொண்டமை, 'தமிழின மீட்புப் பணி'யெனக் கொள்ளத்தக்கதாம்.

தமிழ்மண் பதிப்பகம் 'கருவிநூல் பதிப்பகம்' என்னும் பெருமைக்கு உரியதாய்த் திகழ்கிறது.

- புலவர் இளங்குமரனார்

செயற்கரிய செய்யும் இளவழகன்

பள்ளி மாணவப் பருவத்திலேயே இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் தளை செய்யப்பெற்ற தறுகண்ணர் கோ.இளவழகன், பெரிதினும் பெரிதாய அரிதினும் அரிதாய பணிகளை மேற்கொள்வதில் எவர்க்கும் முதல் வராய் முன்நிற்பவர். ஆபிரகாம் பண்டிதரின் கருணா மிருத சாகரத்தின் அளவுப் பெருமை கருதி அஞ்சித் தயங்காமல் துணிந்து மறுவெளியீடு செய்த பெருமை இவர்க்கு உண்டு. பாவாணர் படைப்புகள் அனைத்தை யும் ஒரு சேர நூல்களாக வெளியிட்டமை தமிழ்ப் பதிப்புலகம் காணாத பெரும்பணி. பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், அறிஞர் நசிகந்தையா ஆகி யோரின் தமிழ் மறுமலர்ச்சிக் களமாகிய படைப்பு களையெல்லாம் தேடியெடுத்து 'இந்தா' என்று தமிழ் உலகுக்குத் தந்தவர். பிழைகளற்ற நறும் பதிப்புகளாக நூல்களை வெளியிடுவதில் அவர் எடுத்துக் கொள்ளும் அக்கறை தனித்துப் பாராட்டத்தக்கது. தமிழ்க்கடல் புலவர் இரா. இளங்குமரனாரின் தொல்காப்பியச் சொற் பொருள் களஞ்சியத்தையும், இலக்கண மேற்கோள் நூற்பாவையும் செப்பமாக வெளியிடுவதில் அவர் மேற்கொள்ளும் அரிய முயற்சிகளை அண்மை யிலிருந்து அறிந்தவன் நான்.

செயற்கரிய செய்யும் இளவழகனாரின் அருந்தமிழ்ப் பணிகளுக்குத் துணை நிற்பது நற்றமிழ்ப் பெருமக்கள் அனைவரின் கடன்.

- முனைவர் இரா.இளவரசு

Scanned by CamScanner

சான்றோர்கள் பார்வையில்...

தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ. இளவழகன்

இனவுணர்வோடு தமிழுக்கு ஆக்கம் சேர்த்தவர் பாவாணர். அவருடைய நூல்களை எடுப்புடனும் அழகாகவும் நல்ல முறையில் புதுப்பித்த இளவழகன் ஆழநோக்கி, அடக்கத்துடன் பணியாற்றுபவர். அவருடைய இந்தப்பணியால், இக்காலத்தவர் மட்டுமன்றி, வருங்காலத் தலைமுறையினரும் நல்ல பயன் பெறுவர். அதனால் தமிழ்ச் சமுதாயத்திற்கு லாபத்தை உண்டாக்கியிருக்கிறார்.

– தமிழர் தலைவர் **கி.வீரமணி.**
திராவிடர் கழகம்

தமிழ்த்தேசிய இனத்தை ஒன்றுபடுத்தி வலிமை வாய்ந்த இனமாகத் திகழச் செய்வதற்கு பாவாணர் நூல்கள் தமிழர் இல்லந்தோறும் தவறாமல் இடம்பெற வேண்டும். தன்னிழப்பிற்கு ஆளான போதிலும் கொஞ்சமும் கவலைப்படாது 'பாவாணர்' அவர்களின் நூல்களை மீண்டும் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள திரு கோ. இளவழகனுக்குக் கைகொடுக்க வேண்டியது தமிழர்களின் நீங்காத கடமையாகும்.

– பழ. நெடுமாறன்
தலைவர், உலகத் தமிழர் பேரமைப்பு

பைந்தமிழுக்குப் பெருமையும் சிறப்பும் தேடித் தந்தவர் நம் பாவாணர். அவருடைய நூல்களை அழகுறத் தொகுத்து வெளியிட்டமைக்காக இளவழகனார் பாவாணரை மீண்டும் உயிர்த்தெழச் செய்து விட்டார் என்று நான் கருதுகிறேன். அந்தச் சிறப்பும் பெருமையும் இளவழகனாருக்கு உண்டு. கடந்த ஆண்டு பாவாணரின் 38 நூல்களைப் பதிப்பித்த கோ. இளவழகன் அவர்கள் இவ்வாண்டு மீதி நூல்களையும் நூல் வடிவம் பெறாதவற்றையும் வெளிக்கொணர்ந்தமையைப் பாராட்டுகிறேன்.

இந்தி மேலீடு தமிழ் மண்ணில் காலூன்றி நிலைபெற முயன்ற அறுபதுகளில் இந்தியை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டும் என வீறுகொண்டெழுந்த நல்லிளஞ் சிங்கங்களுக்கு நான் தலைமையேற்று சிறைப்பட்ட காலத்தில் தம் சொந்த ஊரான உரத்தநாட்டுப் பகுதியில் செயலாற்றிச் சிறைப்பட்டவர் அருமை இளவல், தமிழ்மொழி காவலர் கோ. **இளவழகன்** அவர்கள். தமிழ்மண் பதிப்பகத்தின் வாயிலாகப் பாவாணரின் நூல்களை மறுபதிப்புச் செய்து வெளியிட்டுள்ள தமிழ்மொழி, இன, நாட்டுணர்வு மிக்க திரு.கோ. இளவழகன் அவர்களின் பணி பாராட்டிற்குரியது; பெருமைக்குரியது. தமிழர்கள் தங்கள் விழுமிய வாழ்வு நலன்களைத் தேடி முன்னேறுவதற்கு மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் தம் தெள்ளிய அறிவாலும், ஆய்வுத் திறனாலும் எழுதிய நூல்கள் அனைத்தும் பயன் தருவன.

– கா. காளிமுத்து
தமிழக மேனாள் சட்டப் பேரவைத் தலைவர்

பாவாணரது நூல்கள் அணிஅணியாகப் படையெடுத்து வருகின்றன. கையிலிருந்து உருபா 1000 செலவிட்டு, 'ஒப்பியன் மொழி நூலை' வெளியிட்டு விட்டுக் கையைச் சுட்டுக் கொண்டதாக கூறும் பாவாணர் இப்போதிருந்தால் எத்தகைய மகிழ்ச்சிக்கும் ஆளாவார்? 40க்கும் மேற்பட்ட நூல்கள் ஒரே இடத்தில்; வெளிவராத கட்டுரைகளும் திரட்டப்பட்டு புதுப்புது நூலாக வடிவம் பெற்று வருகின்றன. அதுவும் அடுத்தடுத்து. இந்தப் பெருமைகட்கெல்லாம் காரணமாக விளங்கும் அருமை நண்பர் இளவழகன் வரலாற்று முத்திரை பொறித்துவிட்டார் எனலாம். அவர்க்கு என் பாராட்டுகள்.

– முனைவர் **மு. தமிழ்க் குடிமகன்**
தமிழக மேனாள் அமைச்சர்

Scanned by CamScanner

பி.டி. சீனிவாச ஐயங்கார்

கோ. இளவழகன் தமிழ்மண் பதிப்பகத்தின் வழி எழுதிய "தமிழர் வரலாறு" எனும் இந்நூலை வெளியிட்டுள்ளார். தமிழ் மறுமலர்ச்சி பெறும் வகையில் அப்பெரு நோக்கு ஒன்றையே, தன்நோக்கமாகக் கொண்டு தமிழ் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும், **மறுமலர்ச்சிப் பதிப்புக் குரிசில்** கோ. இளவழகன் வருங்கால வரலாற்றில் இடம் பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றார். அதற்குச் சான்றாகும் வகையில் இந்நூல் வெளிவந்துள்ளது.

– முனைவர் **தமிழண்ணல்**
மதுரை

தமிழ்மண் பதிப்பகம் என்னும் தன் பெயருக்கு ஏற்பத் தமிழ் மண்ணுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழினத்திற்கும் அரணாக அமையும் நூல்களை மட்டுமே தேர்ந்தெடுத்து வெளியிடுதலைத் தன் தொடக்க நாள் முதலே கொண்டமை, தமிழின மீட்புப் பணியெனக் கொள்ளத்தக்கதாம். தமிழ் மண் பதிப்பகம் 'கருவிநூல் பதிப்பகம்' என்னும் பெருமைக்கு உரியதாய்த் திகழ்கிறது. தமிழ்மண் பதிப்பகம் வெளியிடும் நூல்கள் எல்லாமும் கருவி நூல்களாகவே இருத்தல் செயற்கரிய செய்யும் செழும் செயலாம்.

தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் திரு. இளவழகனார், திருவள்ளுவர் குறித்த ஓர் அதிகாரத்தைத் தேர்ந்த கடைப்பிடியாகக் கொண்டவர். அவ்வதிகாரம், **'பெரியாரைத் துணைக்கோடல்'** என்பது. புலமை நலம் சான்ற பெருமக்கள் துணையே அவர்தம் பதிப்புப் பணிக்கு ஊற்றமும் உதவியுமாய் அமைந்து உலகளாவிய பெருமையைச் செய்கின்றதாம்.

பாவாணர் நூல்களை வெளியிடுவதன் மூலம் இனமான மீட்புப் பணியை இளவழகனார் செய்து வருகிறார். தமிழ்மண் பதிப்பகம் எனும் பெயரில் உள்ள 'மண்' எனும் சொல், செறிவு, மணம், மருவுதல், நல்ல பண்பாடுகள் கலத்தல் எனும் பொருள்களை உள்ளடக்கியுள்ளது.

– முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**
மதுரை

தழைத்தோங்கும் தமிழ்மண்!

திரு. இளவழகனை வாழ்த்த வேண்டியது நமது கடனென்றே கருதுகிறேன். இன்றைய நிலையில் தமிழாராய்ச்சி மாணவர்களுக்கு வேண்டிய பல முக்கிய நூல் திரட்டுகளை வெளியிடுவதன் மூலம் தமிழாராய்ச்சிக்கு இவர் பெரிதும் உதவுகிறார். இவரது இப் பணியை ஊக்குவிக்க வேண்டியது தமிழ்சார்ந்த நிறுவனங்களினதும் தமிழ்ப் பெரியோர்களினதும் கடமையாகும். உண்மையில் இதனை ஒரு அறிவுப்பசிப் பிணித் தீர்வாகவே நான் காண்கிறேன். திரு. இளவழகன் அவர்களது பெயர் நின்று நிலைக்கட்டும்.

தமிழீழ அறிஞர் ந.சி.க. நூல் திரட்டுக்கு எழுதியக் குறிப்பு.

– முனைவர் **கார்த்திகேசு சிவத்தம்பி**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பாராட்டுச் சான்றிதழ்

பள்ளியில் பயிலும் காலத்திலேயே இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு அரசால் தளைப்படுத்தப்பட்டவரும், பாவாணரைத் தன் ஊர்ப்பகுதிக்கு அழைத்துச் சென்று பெருமை கொண்டவரும், பாவாணர் பெயரில் அச்சகம் அமைத்தவரும், தொடர்ந்து தனித்தமிழ் உணர்வைப்

Scanned by CamScanner

பேணி வருவதில் முன்னிற்பவரும், மக்களுக்கு இனியன், தமிழமுது எனும் இன்றமிழ்ப் பெயர்களைச் சூட்டி இருப்பவரும், ஈழத்தமிழர் விடுதலைக்காகப் பெரிய அளவில் அரிய பணிகளைச் செய்தவரும், தமிழர்களை விழிப்புறச் செய்யும் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருபவரும், காண்பதற்கு அரியதாக இருந்த, ஆபிரகாம் பண்டிதரின் 'கருணாமிர்த சாகரம்' என்னும் அரும்பெரும் நூலைப் பெரும் பொருட் செலவில் காணவைத்தவரும், பாவாணர் நூற்றாண்டின் மணிமுடிச் செயலாகப் பாவாணர் நூல்கள் அனைத்தையும் வெளியிடும் பணியை மேற்போட்டுக் கொண்டு மிகச் சிறப்பாக அவற்றைத் தமிழ் கூறும் நல்லுலகின் முன் வைத்துள்ளவரும், நற்றமிழ் நெஞ்சர் அனைவரின் போற்றுதலைப் பெற்றிருப்பவரும் தமிழ்மொழிக் காவலரும், தமிழ்மண் பதிப்பக உரிமையாளரும் ஆகிய **கோ. இளவழகன்** அவர்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்வதில் பெருமை கொள்கிறது தமிழியக்கம்.

- முனைவர் இரா. இளவரசு
சென்னை

தமிழ், தமிழர், தமிழர் நாகரிகம், பண்பாடு குறித்த நூல்களை வெளியிடுவதைக் குறிக்கோளாகக் கொண்ட தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் கோ. இளவழகன் தந்தை பெரியார் வழி நிற்கும் பகுத்தறிவாளர். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் வழி நிற்கும் தனித்தமிழ்ப் பற்றாளர்; இக்கொள்கைகளில் அழுத்தமாக என்றும் மாறாது நிலைத்து நிற்பவர். மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் நூல்கள் அனைத்தையும் திரட்டி அச்சிட்டு தமிழ்மக்கள் கைகளில் தவழவிட்ட பெருமை இளவழகனாரையே சாரும். தொல்காப்பியம் பண்டைய உரைகள் அனைத்தையும் கொண்ட தொகுதிகளையும் வெளியிட்டு 'உரைவளம்' கண்டுள்ளார். நண்பர் இளவழகன், தனக்குக் கைப்பிடிப்பே என்றாலும் இத்தகைய நூல்கள் வெளிவந்தேயாகவேண்டும் எனத் தளராது பாடுபடுபவர். எளிமையும், அடக்கமும், தமிழ்மேம்பாட்டில் முனைப்பும் கொண்ட ஒரு தமிழ் மகனை இளவழகன் உருவிலே காண்கிறேன். தமிழ்மண் பதிப்பக நூல்களைத் தமிழ்மக்கள் வாங்கி மண்ணுக்கு உரம் சேர்த்தால் விளைச்சல் பல மடங்காகப் பெருகும்! மண் செழித்து பல்வேறு வகையான பயனுள்ள பயிர்களை விளைவித்து நலஞ் சேர்ப்பதாகுக என வாழ்த்துகிறேன்.

- சிலம்பொலி.சு. செல்லப்பன்
சென்னை

உலக முதன்மொழி தமிழ்

தமிழ்க் கலைச்செல்வங்களையும், தமிழிய வரலாற்று உரிமை ஆவணங்களையும், சற்றும் சிதைவில்லாமல் பேணிக் காத்துப் பரப்பும் தலையாய தமிழ்க் கடமையைத் தலைமேற் கொண்டுள்ள 'தமிழ்மண் பதிப்பகம்' முன்னர் என்னுடைய பிற நூல்களை வெளியிட்டதோடு, இக்கால் **உலக முதன்மொழி தமிழ்** எனும் இந்நூலையும் வெளியிடுகின்றது. அப் பதிப்பகத்தின் உரிமையாளர் தமிழ் மொழிக் காவலர் கோ. இளவழகர் அவர்களுக்கு நான் நன்றியுடையேன்.

- பேரா. **கு. பூங்காவனம்.**
பெங்களூர்.

இதுவரை நூல் வடிவில் வெளிவராத செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி முதலான பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும் வெளிவந்த அரை நூற்றாண்டுக்கால உழைப்பால் பாவாணர் அவர்கள் எழுதி வெளிவந்த கட்டுரைகளையும் நூல்களாக்கும் பணியில் 'தமிழ்மண் பதிப்பகம்' ஈடுபட்டுள்ளது வரவேற்கத்தக்கது, பாராட்டத் தக்கது.

- இரா. முத்துக்குமாரசாமி
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

Scanned by CamScanner

எந்த ஒரு தமிழ்ப் பெருமகனும் பெறாத பேற்றினைப் பாவாணர் நூற்றாண்டு விழாவில் பாவாணர் பெற்றார். அவர் எழுத்துக்கள் அனைத்தையும் வன்தொண்டர் இளவழகன் நற்றமிழ் அறிஞர் நக்கீரன் துணையுடன் வகுத்து தொகுத்து வழங்கியது வரலாற்றுச் சிறப்புடைய நிகழ்ச்சி.

50 ஆண்டுகளுக்கு முன் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இதழ்களில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தையும் புறநானூற்றுத் தொகை, அகநானூற்றுத் தொகை போல, 15 தொகைகளாகத் தொகுத்து வழங்கிய வல்லமைக்கும் வள்ளண்மைக்கும் தமிழ்கூறு நல்லுலகம் பதிப்பாளர் கோ. இளவழகன் அவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாக நன்றி சொல்லக் கடப்பாடு உள்ளது. இவரது சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்க நமது பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்.

- பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன்
சென்னை

தமிழுலகத்திற்குப் பாவாணர் படைப்புகளை முழுமையாகக் கொணரும் முயற்சியில் வெற்றி பெற்றுள்ள தமிழ்மண் பதிப்பகம் பலவகையிலும் பாராட்டிற்குரியது. மொழிக் காவலர் கோ. இளவழகனாரின் தனிமுயற்சி தமிழுக்குப் பெருந்தொண்டாய் அமைந்தது என்பது உயர்வு நவிற்சி யன்று; உண்மை நவிற்சியே. நூல் வடிவில் வந்தவற்றை மறுபதிப்பு செய்ததோடு அமையாமல் பல்வேறு இதழ்களில் பலகாலக் கட்டங்களில் வெளிவந்த கட்டுரைகளையும் ஒன்று திரட்டி வெளியிட்டுள்ளார். தமிழாய்வுக்கு ஊக்கம் தரும் இப் பணியை ஆதரிப்பது தமிழறிந்தார் அனைவரின் கைக்கடனாகும்.

- முனைவர் இரா. கு. ஆல்துரை
சென்னை.

பாவாணரின் நூற்றாண்டு விழாவை நாடு முழுவதும் தமிழறிஞர்கள் கொண்டாடிவரும் வேளையில் பாவாணரின் நூல்களையெல்லாம் மறுபதிப்புச் செய்யும் பகுத்தறிவுத் தமிழ்த்தொண்டில் ஈடுபட்டுள்ள தமிழ்மண் பதிப்பக உரிமையாளரும், இந்தி மேலாண்மை எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுச் சிறைசென்ற தமிழ்மொழிக் காவலருமான அருமை நண்பர் கோ. இளவழகன் அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன். பாவாணர் அவர்களின் ஆய்வு நூல்களை முழுமையாகக் கற்றவர்கள் தமிழ் முழுத்தறிந்த தகைமையாளர்களாகவும், பெருமித உணர்வு கொண்டவர்களாகவும் விளங்குபவர் என்பது ஒருதலை.

- பேரா. பி. விருத்தாசலம்,
தஞ்சாவூர்.

தமிழ்மொழி, இனமீட்பு நோக்கினைக் கொண்டு எழுதப்பெற்ற பாவாணரின் நூல்கள் தமிழ்ப்போராளிகட்குக் கிடைத்த சிறந்த படைக்கலனாகத் திகழ்வது. பாவாணர் நூல்கள் அனைத்தையும் வெளிக்கொணரும் தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் மொழிப் போராளி திரு கோ. இளவழகனுக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றி. பாவாணர் நூல்களை வெளியிடும் இளவழகனார் முயற்சி வென்றிட வாழ்த்துகள்.

- முனைவர் கு. திருமாறன்
திருச்சிராப்பள்ளி

பாவாணர் நூல்கள் அனைத்தையும் வெளியிடும் தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் இளவழகனாரின் பேருழைப்புப் போற்றத்தக்கது. பெரும்பொருட் செலவில் இத்திட்டத்தைத் துணிந்து ஏற்றுப் பாவாணர் நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கும் அவரது வள்ளன்மையை வணங்கிப் போற்றுகிறேன்.

- முனைவர் சி.இ. மறைமலை,
சென்னை.

Scanned by CamScanner

மொழிஞாயிறு பாவணர் தம் நூல்களை வெளியிடத் துணிந்த தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் திரு கோ. இளவழகனைத் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டும். தமிழகத்திற்குப் பயன்தரும் பல்வேறு நூல்களைத் தமிழ்மண் பதிப்பகம் தரவேண்டும் என நெஞ்சார வாழ்த்துகிறேன்.

– பெரும் புலவர் **கி.த. பச்சையப்பன்**

சென்னை

தமிழ்நாட்டரசு நாட்டுடைமையாக்கிய பின்னர் வெளிவரும் பாவாணரின் நூல்களை செப்பமுற அகத்தினழகு முகத்தில் தெரியும்படியாக உள்ளீட்டை மிகச் சிறப்பாக வெளியிடும் தமிழ்மண் பதிப்பகம் உரிமையாளர் தமிழ்த்திரு கோ. இளவழகனாருக்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையது.

– புலவர் **ஆ. முத்துராமலிங்கம்**

திருநெல்வேலி

1970இல் சென்னைப் பேருந்து ஒன்றில் “தென்மொழி” படித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரைக் கண்டு மகிழ்ந்து, வலிய அவரிடம் நட்பு கொண்டேன். அந்த இளைஞரே இன்றைய தமிழ்மண் இளவழகனார். இப்போது 2002இல் பாவாணர் நூல்களின் பதிப்பாளர் கோ. இளவழகனார். இவரோடு எனது பணியும் துளி... தமிழுள்ளங்கள் எங்கிருந்தாலும் மொழி ஈர்ப்பால் இணைந்து, தமிழுறவு மலரும் என்பதற்கு நானறிந்த சான்று இது. வாழ்க தமிழ்! வளர்க தமிழ்மண் பதிப்புத் தமிழ்த்தொண்டு!

– ச. சிவ. வல்லாளன்

தஞ்சாவூர்

இற்றைக்கு முப்பத்தோர் ஆண்டுகட்கு முன் வெளியான மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் எழுதிய திருக்குறள் மரபுரை எனும் இவ்வரிய உரைநூல் மடிந்து, ஒடிந்துபோகும் நிலையில் உள்ளது. அது மடித்துப் போகாமல் வேற்றுடலம் மாற்றி, புதுவாழ்வு தோற்றி உங்கள் கைகளில் தவழும் வண்ணம் மீண்டும் வெளியாக்கப்பட்டிருப்பது பெரிதும் போற்றுதற்கும், பலரின் பாராட்டுதலுக்கும் உரியதாகும். தூற்றுதல்களையும் போற்றுதல்களையும் ஏற்று, பாவாணர் நூல் வெளியீட்டுப் பணியோடு, பலபெரும் பணிகளையும் தம் தோளின் மேற் போட்டுச் சுமந்து, துவளாது பாடாற்றும் எம் உளம் புகுந்த அன்புத் தம்பி உயர்திரு கோ. இளவழகன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

– சி. அரசிறைவன்

தஞ்சாவூர்

பாவாணரின் நூல்கள் அனைத்தையும் மீண்டும் பதிப்பித்துத் தரும் ‘தமிழ்மண்’ பதிப்பகத்தின் அரும்பணி, தலைவணங்கிப் பாராட்டுவதற்கு உரியது. எதிர்காலத் தமிழ் இனத்துக்கு இவ்வரிய கருவூலத்தை வழங்கியுள்ள ‘தமிழ்மண்’ பதிப்பகம் காலத்தின் ஏடுகளில் கவனத்திற்குரியது.

– பேரா. **சுப.வீரபாண்டியன்.**

சென்னை

Scanned by CamScanner

பாவாணர் நூற்றாண்டில் அவரது கருத்துகளைத் தமிழர்களிடம் கொண்டு சேர்க்கத் தமிழ்மண் பதிப்பகம் தளரா முயற்சியுடன் களம் இறங்கி உள்ளது. பாவாணர் நூல்கள் அத்தனையும் மறுபதிப்பாக வெளிவருகின்றன. தமிழ்மண் பதிப்பகத்தின் நிறுவனர் கோ.இளவழகன் அவர்களுக்கு எனது நெஞ்சு நிறைந்த பாராட்டுகள்.

– முனைவர் ந. அரணமுறுவல்
சென்னை

பாவாணர் நூல்களை வெளிக்கொணரும் தமிழ்மண் உரிமையாளர் கோ. இளவழகன் அனைவராலும் பாராட்டப்படவேண்டியவர். தமிழ்கூறும் நல்லுலகம் இம் முயற்சிக்குத் துணை நிற்க வேண்டுகிறேன்.

– முனைவர். பி. தமிழகன்
திருச்சிராப்பள்ளி

பாவாணர் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் வெளியிடும் மொழிப் போராளி கோ. இளவழகன் அவர்களின் அயரா முயற்சியால் வெளிவரும் நூல்கள் தமிழறிந்தார் இல்லந்தோறும் உள்ளந்தோறும் இருக்கவேண்டிய அரிய பெட்டகமாகும். மொழியறிந்தோரும் முன்னாளில் தமிழர்க்கு வந்த பழியறிந்தோரும் இதனை ஏற்றுப் போற்றுவர் என்பது என் போல்வார் நம்பிக்கை.

– முனைவர் கு. அரசேந்திரன்
சென்னை

தெளிதமிழ் அறிஞர் தேவநேயரின் அருந்தமிழ் நூல்களை வெளியிட முனைப்புடன் முன்வந்துள்ள தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் தனித்தமிழ் உணர்வில் தோய்வும், தொண்டும் மிக்குடைய இந்தி மொழிப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற மொழிப் போராளி. அன்பர் கோ. இளவழகன் அவர்களைத் தமிழுலகம் என்றும் போற்றி நின்று வாழ்த்தும் என்பது உறுதி. அன்பர் இளவழகன் அவர்கள் இத்தகுத் தமிழ்த் தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிட உடல் நலமும்,பொருள்வளமும் பெற்றுவாழ நீள நினைந்து வேண்டுகிறேன்.

– முனைவர் பெ. சுப்பிரமணியன்.
தஞ்சாவூர்

எண்ணமும் வாழ்வும் தமிழே!

தமிழ் மொழிக்கு ஏற்றம் தரும் எண்ணம் தவிர வேறெந்த எண்ணத்திற்கும் என்றும் இடந்தரா மனத்திட்பமும், தமிழ் இனத்திற்கு வாழ்வளிக்கும் செயலேயன்றி வேறெதையும் சற்றும் கருதிப் பார்க்காத மூச்சும், பேச்சும், தமிழ் நாட்டின் உயர்வுக்கான உழைப்பேயன்றி வேறெதையும் பெருமையாகக் கொள்ளாத உயர் வினைத்திட்பமும் நானறிந்த வரையில் ஒருவருக்கே சொந்தம். அவர்தாம் அண்ணன் இளவழகன் அவர்கள். தமிழ்மண் பதிப்பகத்தின் வாயிலாக அவர் வெளியிட்டுள்ள, தமிழ் மொழிக்கு எதிர்கால வைப்பாக அமையும் பல நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் அவருடைய தன்னிகரில்லா உழைப்பைப் பறைசாற்றுவன. தமிழ் மொழி இன நாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களின் நூல்களை வரிசை வரிசையாக ஒருசேரப் பதிப்பித்து தமிழுக்கு அணி செய்த அவர்தம் வாணாள் பணி பற்றித் தமிழ் அமைப்புகளும், அறிஞர்களும், பாவலர்களும், இதழ்களும் நல்கிய கருத்துரைகளும், பாராட்டுகளும் பாமாலைகளும் பலப்பல.

– அ. மதிவாணன்
சென்னை

Scanned by CamScanner

தழைத்தோங்கும் தமிழ்மண்!

தங்களுடன் கடந்த வாரம் பேசிய மகிழ்வினின்று மீளும் முன்னரே தங்களின் மடலும் அய்யா அவர்களின் நிழற்படமும், குறிப்பும் தாங்கிய சிறுபுத்தகங்களும் கிடைக்கப் பெற்றன. தமிழ் மண்ணிலும் இவ்வளவு வேகமா? செயற்பாட்டில்! என்ற பூரிப்பும் மனத்தில் சேர்ந்தது. மற்றபடி தங்களின் முயற்சியின் வெற்றி தாங்கள் அனுப்பிய மடல் வழி வந்த விவரம் அறியும்போது மனதில் பெருத்த உவகை. தமிழ் இனி தழைக்கும்!

பாவாணர் நூல்கள் வெளியீட்டின் போது வழங்கிய மகிழ்வுரை.

- வ.செ. பாபு
மேனாள் தலைவர்
வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை

சிந்துவெளி நாகரிகம் புதிய ஒளி இந்நூலை மிகப்பெரும் பொறுப்பெடுத்து வெளியிடும் தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் எம் ஒரு தனி உழுவல் பேரன்பு சான்ற பெருமகன், பதிப்புத்துறையில் வரலாற்று முத்திரை பதித்து வரும் மொழிக்காவலர், ஐயா கோ., இளவழகனார் அவர்களை எப்படிப் பாராட்டினாலும் தகும். இந்நூல் பெரும்பயன் தரவல்லது என்பதில் அய்யமில்லை. இந்நூல் பலவகையிலும், தமிழ், தமிழர் மீட்சிக்குப் பயன்படும் கருவியாய் அமைந்து துணை புரியும் என்பதை உறுதியாய் நம்பலாம். வெல்க தமிழிய மீட்சிப்பணி.

- திரு. இரா. திருமாவளவன்
தேசியத் தலைவர்.
மலேசியத் தமிழ்நெறிக் கழகம்

அறிஞர் சதாசிவ பண்டாரத்தார் அவர்களின் நூல்களை மறுபதிப்பாக வெளிக் கொணர்ந்து தமிழுலகில் வலம் வரச் செய்திருக்கும் தமிழ்மண் பதிப்பக நிறுவனர் ஐயா கோ. இளவழகனார் அவர்களுக்கு, தமிழ்கூறு நல்லுலகம் என்றும் நன்றியுடையதாக இருக்கும் என்பதில் எள்முனை அளவும் ஐயமில்லை. தமிழ்மண் பதிப்பகத்தின் இந்த அரிய வெளியீட்டைத் தமிழ் நெஞ்சங்கள் அனைத்தும் வாழ்த்தி வரவேற்கும் என்ற நம்பிக்கை நம் அனைவருக்கும் உண்டு.

- முனைவர் **அ.ம. சத்தியமூர்த்தி**
கும்பகோணம்.

தமிழகப் பதிப்புத்துறை வரலாற்றில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைப் போலவே தமிழ்மண் பதிப்பகமும் பலநூறு ஆண்டுகளுக்குத் தமிழறிஞர்களால் புகழ்ந்து பாராட்டப் பெறும். இளவழகன் அவரது இந்த முயற்சி இமயமலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் வங்காள விரிகுடாவில் வைப்பது போன்ற அரிய பெரிய முயற்சி ஆகும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (திருக்குறள் 665)

என்னும் குறளுக்குத் திரு கோ. இளவழகன் அவர்களே தக்கதோர் எடுத்துக் காட்டாவார். அவர் வாழ்க! அவர் முயற்சி வெல்க! என்று நான் வாயார மனமார வாழ்த்துகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நாட்டார் ஐயாவின் நூல்கள் இடம் பெறுமாறு செய்ய வேண்டுவது தமிழறிஞர்களின் கடமை ஆகும். அதுபோலவே தமிழக அரசால் நடத்தப்பெறும் தமிழ்நாட்டில் உள்ள நூலகங்கள் அனைத்திலும் ந.மு.வே. நாட்டார் ஐயா அவர்களின் நூல்கள் இடம்பெறுமாறு செய்யும்படி தமிழக அரசை அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

- பேரா. பி. திருமுதுகுன்றம்
(பி. விருத்தாசலம்)

Scanned by CamScanner

தமிழ்மண் பதிப்பகம்

2, சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், சென்னை - 17. 24339030, 9444410654

வ.எண்.	அரிய நூல்கள்	மொத்தத் தொகுதிகள்	மொத்த நூல்கள்	மொத்தத் பக்கங்கள்
1.	சாமி சிதம்பரனார் நூற்களஞ்சியம்	22	37	8504
2.	மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம்	20	20	5848
3.	அறிஞர் க. வெள்ளை வாரணனார் நூல் வரிசை	21	21	6394
4.	முதுமுனைவர் இளங்குமரனார் தமிழ்வளம்	40	80	11992
5	திரு.வி.க. தமிழ்க்கொடை	26	54	8560
6.	முனைவர் இராசமாணிக்கனார் நூல்கள்	39	39	5168
7.	பாவாணர் தமிழ்க் களஞ்சியம்	53	53	9120
8.	தொல்காப்பியம் (உரைகளுடன்)	15	15	5432
9.	உரைவேந்தர் தமிழ்த்தொகை (ஔவை துரைசாமி)	28	32	12232
10.	கருணாமிர்த சாகரம் (ஆபிரகாம் பண்டிதர்)	7	7	2172
11.	பாவேந்தம் (பாரதிதாசன்)	25	167	8614
12	புலவர் குழந்தை படைப்புகள்	16	28	6160
13.	நா.மு.வே.நாட்டார் தமிழ் உரைகள்	24	32	7862
14.	கவியரசர் முடியரசன் படைப்புகள்	13	22	3488
15.	செவ்விலக்கிய கருவூலங்கள்	15	15	7608
16.	இராகவன் நூற்களஞ்சியம்	16	16	4056
17.	தமிழக வரலாற்று வரிசை	12	12	4200
18	சதாசிவப் பண்டாரத்தார்	10	16	2252
19.	சாமிநாத சர்மா நூல்திரட்டு	31	76	8940
20.	நாவலர் சோமசுந்தர பாரதியார் நற்றமிழ் ஆய்வுகள்	5	10	1736
21.	ஐம்பெருங் காப்பியங்கள்	5	5	3024
22.	பதினெண் கீழ்க்கணக்கு	3	18	1208
23.	முதுமொழிக் களஞ்சியம்	5	5	1272
24.	செம்மொழிச் செம்மல்கள்	2	2	384
25.	பி. இராமநாதன்	10	10	1718
26.	ந.சி.க. நூல் திரட்டு	24	65	5600
27.	தமிழ் இலக்கணப் பேரகராதி (கோபாலையர்)	18	18	5418
28.	யாழ்ப்பாண அகராதி	2	2	976
29.	வெள்ளி விழாத் தமிழ்ப் பேரகராதி	3	3	1760
30.	நீதி நூல்கள்	2	2	520
31.	உவமைவழி அறநெறி விளக்கம்	3	3	608
32	மறைமலையம்	34	52	11472
33.	குறுந்தொகை விளக்கம் (இரா. இராகவையங்கார்)	1	1	720
34.	தேவநேயம் (பாவாணர்)	13	13	3992
35.	சுப்புரெட்டியார் நூல்கள்	3	3	1320
36.	மாணிக்க விழுமியங்கள் (வ.சுப. மாணிக்கனார்)	18	34	7392
37.	அப்பாத்துரையம்	48	98	15,532
38.	செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்	10	10	3552
39.	தொல்காப்பிய உரைத் தொகை	19	19	8648
40.	சங்க இலக்கியக் களஞ்சியம்	22	22	9378
41	வள்ளுவ வளம் (புலவர். படிக்கராமு)	5	5	2304
42.	பாரத வெண்பா (முதுமுனைவர் இரா. இளங்குமரனார்)	1	1	432
43.	உலகில் தமிழினம் (முனைவர் அன்பரசு)	1	1	152
44.	சிந்து நாகரிகம் புதிய ஒளி (முனைவர் அன்பரசு)	1	1	328
45.	பேரா. இளவரசு நூல்கள் (4)	4	4	868
	மொத்தப் பக்கங்கள் - 2,18,556 x 18 மொத்த விலை = 39,34,008	695	1149	218916

சாமி. சிதம்பரனார் நூற்களஞ்சியம்	மொத்தப் பக்கம் - 8504	மொத்தத் தொகுதிகள் 22 (நூல்கள் 51)	மொத்த விலை 7945/-

பகுத்தறிவுப் பார்வையுடன் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாகத் தமிழ்மக்களின் வாழ்க்கையையும், பழக்க வழக்கங்களையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும் தெளிவுபடுத்தியவர். சமுதாய மாற்றத்தையும், பரிணாம வளர்ச்சியையும் கணக்கில் கொண்டு தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்தவர். பல கட்டுக் கதைகளையும் கற்பனைக் கதைகளையும் இவருடைய கட்டுரைகள் தவிடு பொடியாக்குபவை.

		பக்கம்	விலை
1.	கதாவாசக படமும் செய்யுட் பாடமும் 1,2,3,4	536	500
2.	தமிழர் தலைவர் (தந்தை பெரியார் வரலாறு)	312	290
3.	அணைந்த விளக்கு (கதைச் செய்யுள், அரசியல், சமூக, சீர்திருத்த நாடகம்)	216	200
4.	திருக்குறள் பொருள் விளக்கம்	416	390
5.	நாலடியார் (பாட்டும் உரையும்) நான்மணிக்கடிகை (பாட்டும் உரையும்)	304	285
6.	பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும் எட்டுத் தொகையும் தமிழர் பண்பாட்டும்	352	330
7.	கம்பன் கண்ட தமிழகம் பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்	312	290
8.	சிலப்பதிகாரத் தமிழகம் மணிமேகலை காட்டும் மனித வாழ்வு	440	410
9.	இலக்கியச் சோலை, பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை	280	260
10.	வள்ளுவர் காட்டிய வைதீகம், வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்	256	240
11.	மாதர் சுதந்திரம், ஹென்றி மார்க்சு, ஆபுத்திரன், முன்சீப் வேதநாயகம்	312	290
12.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு உமர்கய்யாம் கவலையற்று வாழ் சிந்தனைச் செய்யுள் புதுக்குறள், அறிவு (கவிதை)	432	405
13.	தேவாரத் திருமொழிகள், ஆழ்வார்கள் அருள்மொழி	288	270
14.	வடலூரார் வாய்மொழி, சங்கப் புலவர் சன்மார்க்கம், பட்டினத்தார் தாயுமானவர் பாடல் பெருமை	416	390
15.	அருணகிரியார் குருபரர் அறிவுரைகள் மணிவாசகர் – மூவர் மணிமொழிகள்	248	230
16.	புதிய தமிழகம், வளரும் தமிழ், தொல்காப்பியத் தமிழர்	304	285
17.	பழந்தமிழர் அரசியல் பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், தமிழர் வீரம்	352	330
18.	சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம் இலக்கியம் என்றால் என்ன? சிறுகதைச் சோலை	504	470
19.	கம்பராமாயணம் தொகுப்பு 1	576	540
20.	கம்பராமாயணம் தொகுப்பு 2	592	555
21.	குறுந்தொகைப் பெருஞ்செல்வம் 1	604	565
22.	குறுந்தொகைப் பெருஞ்செல்வம் 2	452	420

Scanned by CamScanner

சாமி. சிதம்பரனார் நூற்களஞ்சியம்	மொத்தப் பக்கம் - 5848	மொத்தத் தொகுதிகள் 20 (நூல்கள் 42)	மொத்த விலை 5495/-

தமிழாய்வாளர்கள் ஆய்வுப் பணியில் மேலாய்வை மேற்கொள்வதற்கு ஆய்வு நோக்கில் விரிந்த பார்வையுடன் தமிழுக்கு அழியாத அறிவுச் செல்வங்களை உள்ளடக்கிய நூல்களின் தொகுப்பு. தமிழ் - தமிழர் அடையாளங்களை மீட்டெடுக்கும் நூல்கள். வரலாறு - கலை - இலக்கியம் - சமயம் - கல்வெட்டுத் தொடர்பான பன்முகப் பார்வையுடன் எழுதப்பட்டவை.

	பக்கம்	விலை
1. பண்டைத் தமிழர் வரலாறு (சேரர், சோழர், பாண்டியர்)	464	435
2. பண்டைத் தமிழக வரலாறு (கொங்குநாடு, பாண்டியர், பல்லவர், இலங்கை வரலாறு)	512	480
3. பண்டைத் தமிழக வரலாறு (களப்பிரர், துளு நாடு	256	240
4. பண்டைத் தமிழகம் (வணிகம், நகரங்கள், மற்றும் பண்பாடு)	272	255
5. பண்டைத் தமிழகம் (ஆவணம், பிராமி எழுத்துகள், நடுகற்கள்)	200	190
6. பண்டைத் தமிழ் நூல்கள் (கால ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி	448	420
7. தமிழகச் சமயங்கள் (சமணம்)	240	225
8. தமிழகச் சமயங்கள் (பௌத்தம்)	264	250
9. தமிழில் சமயம் (கௌதம புத்தரின் வாழ்க்கை	176	165
10. தமிழில் சமயம் (பௌத்தக் கதைகள், இசைவாணர் கதைகள்)	240	225
11. தமிழில் சமயம் (புத்த ஜாதகக் கதைகள்)	176	260
12. தமிழகக் கலை வரலாறு (சிற்பம், கோயில்)	336	315
13. தமிழகக் கலை வரலாறு (இசை, ஓவியம், அணிகலன்கள்)	272	255
14. தமிழக ஆவணங்கள் (சாசனச் செய்யுள், செப்பேடுகள், கல்வெட்டுகள்)	312	295
15. தமிழக ஆவணங்கள் (மறைந்துபோன தமிழ் நூல்கள்)	336	315
16. தமிழ் இலக்கிய வரலாறு	344	325
17. பண்டைத் தமிழக வரலாறு (கிறித்தவமும் தமிழும்)	144	135
18. தமிழியல் ஆய்வு (சொல்லாய்வுகள், வாழ்க்கை வரலாறு)	224	210
19. பதிப்பு - மொழிபெயர்ப்பு - உரை (நேமிநாதம், நந்திக் கலம்பகம், பிறநூல்கள்)	248	235
20. பதிப்பு (மனோன்மணியம், நாடகம்)	384	360

Scanned by CamScanner

அறிஞர் க. வெள்ளைவாரணனார் | மொத்தப் பக்கம் - 6394 | மொத்தத் தொகுதிகள் 21 (நூல்கள் 21) | மொத்த விலை 6115/-

பழந்தமிழ் நாகரிகத்தின் ஊற்றுக்கண் தமிழும் - சைவமும் என்பதை, தமிழிலக்கியம், தமிழிலக்கணம், தமிழிசை, சைவ சித்தாந்தம் ஆகிய நால்வகைத் துறைகளை மையமாகக் கொண்டு தமிழுக்கு வளமும் வாழ்வும் சிறக்க எழுதப்பட்ட நூல்கள் - தமிழருக்குப் பெரும் பயன் தர வல்ல நூல்களின் தொகுப்புகள்.

	பக்கம்	விலை
சங்ககாலத் தமிழ் மக்கள்	128	120
இசைத் தமிழ்	192	180
தில்லைப் பெருங்கோயில் வரலாறு	160	150
திருவருட்பாச் சிந்தனை	320	300
சைவ சித்தாந்த சாத்திர வரலாறு-1	384	360
சைவ சித்தாந்த சாத்திர வரலாறு -2	400	375
திருவருட் பயன் (நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன்)	192	180
திருமந்திர அருள்முறைத் திரட்டு (உரையுடன்)	312	295
திருவுந்தியார் - திருக்களிற்றுப்படியார் (விளக்கவுரை)	216	205
தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்	448	420
தொல்காப்பியம் - நன்னூல் (எழுத்ததிகாரம்)	312	295
தொல்காப்பியம் - நன்னூல் (சொல்லதிகாரம்)	448	420
தொல்காப்பியம் - பொருளதிகரம் (புறத்திணை இயல்)	488	460
தொல்காப்பியம் - பொருளதிகாரம் (களவியல்)	296	280
தொல்காப்பியம் - பொருளதிகாரம் (கற்பியல்)	232	220
தொல்காப்பியம் - பொருளியல்	184	175
தொல்காப்பியம் - பொருளதிகாரம் (மெய்ப்பாட்டியல்)	232	220
தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உவமையியல்)	144	135
தொல்காப்பியம் - பொருளதிகாரம் (செய்யுளியல் - 1)	616	580
தொல்காப்பியம் - பொருளதிகாரம் (செய்யுளியல் - 2)	528	495
தொல்காப்பியம் - பொருளதிகாரம் (மரபியல்)	264	250

Scanned by CamScanner

இளங்குமரனார் தமிழ் வளம்	மொத்தப் பக்கம் - 11992	மொத்தத் தொகுதிகள் 40 (நூல்கள் 91)	மொத்த விலை 9130/-

முதுமுனைவர் இளங்குமரனார் அவர்கள் மொழிஞாயிறு பாவாணர் தடம் பற்றி வாழும் நிறைதமிழறிஞர். காக்கை பாடினியம், களவியல் காரிகை, யாப்பருங்கல விருத்தி (பழைய விருத்தியுடன்), புறத்திரட்டு போன்றவற்றிற்கு உரை வரைந்தவர். வழக்குச் சொல், இணைச்சொல், இலக்கண அகராதிகளைத் தொகுத்தவர். வாழும் தமிழ்அறிஞர்களில் வணங்கத்தக்கவர். வாழ்வின் முழுப்பொழுதும் தமிழ்வாழ வாழ்பவர். சங்கச் சான்றோர் வரிசையில் வைத்துப் போற்றத்தக்கவர். தமிழ்மண் பதிப்பகத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தோன்றாத்துணையாக இருப்பவர்.

		பக்கம்	விலை
1.	வழக்குச்சொல் அகராதி வட்டார வழக்குச் சொல் அகராதி	432	270
2.	இணைச்சொல் அகராதி இலக்கிய வகை அகராதி	400	250
3.	உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம் (அகரவரிசை)	288	180
4.	இலக்கண அகராதி (ஐந்திலக்கணம்) 1. எழுத்து, 2. சொல், 3. பொருள், 4. யாப்பு, 5. அணி	552	345
5.	புறநானூற்றுக் கதைகள் அந்த உணர்வு எங்கே? பெரும் புலவர் மூவர் பண்டைத் தமிழ் மன்றங்கள்	504	315
6.	திருக்குறள் ஆராய்ச்சி - 1	312	195
7.	திருக்குறள் ஆராய்ச்சி - 2	312	195
8.	திருக்குறள் கதைகள்	224	140
9.	திருக்குறள் கட்டுரைகள்	232	145
10.	காக்கைபாடினியம்	336	210
11.	களவியற் காரிகை	272	170
12.	தகடூர் யாத்திரை - மூலமும் உரையும்	216	135
13.	யாப்பருங்கல விருத்தி - (பழைய விருத்தியுரையுடன்)	680	425
14.	தமிழ்க் "கா.சு" கலைக் களஞ்சியம்	184	115
15.	தமிழ் வளம் - சொல்	296	185
16.	தமிழ் வளம் - பொருள்	264	165
17.	புறத்திரட்டு	584	365
18.	வாழ்வியல் வளம்	208	130
19.	தமிழர் வாழ்வியல் இலக்கணம்	288	180
20.	1. கல்விச் செல்வம் 2. இருசொல் அழகு 3. தனிப்பாடல் கனிச்சுவை 4. பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி	256	160
21.	சான்றோர் வரலாறு: அரசஞ்சண்முகனார், வேதநாயகம் பிள்ளை, தாமோதரனார்	184	175
22.	தமிழ்மலை, மறைமலையடிகள் ஆராய்ச்சித்திறன்	224	210
23.	பாவாணர் - பொன்மொழிகள் - உவமைகள்	400	375
24.	பாண்டி நாட்டுப் புலவர்கள் 1,2	176	165
25.	தமிழ்க் கா.சு.வின் தமிழர் சமயம் ஓர் ஆய்வு, திரு.வி.க. தமிழ்த் தொண்டு	232	220
26.	திருவரங்கர் வரலாறு	184	175
27.	வ.சு. வரலாறு	384	360
28.	ஈரோடு வேலா (வரலாறு), குணநலத் தோன்றல் குப்புமுத்து ஐயா	280	265

Scanned by CamScanner

இளங்குமரனார் தமிழ் வளம் (1-40)

		பக்கம்	விலை
29.	கவிஞர் தாகூர் - பிணி தீர்க்கும் பெருமான்,	128	120
	அறப்போர், இரு கடற்கால்கள்		
30.	அண்ணல் ஆபிரகாம், அறவோர் அமைதிப் பணிகள்,	256	240
	உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்		
31.	மதுரைக் கோயில் வரலாறு, மதுரைத் திருக்கோயில்,	352	330
	திருவிளையாடற் கதைகள், மதுரை நான்காம் தமிழ்ச சங்கம்	168	160
32.	அன்பும் அறிவும், பழனி பாலநீதி	184	175
	நீதிபோத வெண்பா, நீதி சாரம்		
33.	சிற்றருவி (குழந்யைர் பாடல்), வானவில்,	256	240
	முல்லாவின் கதைகள் முப்பது		
34.	வள்ளுவர் வழியில் வள்ளலார்,	208	200
	வள்ளலார் கண்ட சாகாக்கலை		
35.	பரிபாடலில் திருமுருகன்,	280	265
	பெரும்பொருள் விளக்கம் (உரை நூல்)		
36.	சொல்லியன் நெறிமுறை - அகல், செந்தமிழ்ச்	272	255
	சொல்வளம், வேர்ச்சொல் விரிவு, பேரகத்தியமும்		
	புதிய ஐந்திறமும், தொல்காப்பியர் காலம்		
37.	சிவ வாக்கியர், குதம்பைச் சித்தர், சிவஞானபோதம்	296	280
38.	திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா,		
	திருவருணைக் கலம்பகம், மதுரைச் சொக்கநாதர்		
	திருவிளையாடல் அம்மானை, மீனாட்சியம்மை		
	குறம் - இரட்டை மணிமாலை		
39.	வாழ்வியல் வழிநடை, வையகம் தழுவிய வாழ்வியல்,	312	295
	வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும்		
40.	வள்ளுவமும் வாழ்வியலும், திருக்குறள் நோக்கு,	376	350
	திருக்குறளில் ஒப்புரிமை, தரக்கட்டுப்பாடும் திருக்குறளும்.		

Scanned by CamScanner

திரு.வி.க. தமிழ்க்கொடை | மொத்தப் பக்கம் - 8560 | மொத்தத் தொகுதிகள் 26 (நூல்கள் 57) | மொத்த விலை 7930/-

20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் உரைநடை முன்னோடி. அறநெறியும், சமய நெறியும், ஆய்வு நெறியும், இலக்கிய நெறியும், அரசியல் நெறியும், தொழிலாளர் நலனும், மகளிர் மேன்மையும் குறித்து நூல்கள் பல எழுதியவர். மேடைத் தமிழுக்கு மெருகேற்றியவர். அவர் வாழ்ந்த காலப்பகுதியில் வாழ்ந்த அறிஞர்களால் மதிக்கப்பட்டவர். சான்றாண்மைக்கு ஒப்பிலா ஒருவர்.

		பக்கம்	விலை
1.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 1 நா. கதிரைவேற் பிள்ளை சரித்திரம், நாயன்மார் வரலாறு	320	300
2.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 2 மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	352	330
3.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 3 பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	264	250
4.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 4 உள்ளொளி, முடியா? காதலா? சீர்திருத்தமா?	328	310
5.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 5 திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்- 1	368	345
6.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 6 திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்- 2	432	405
7.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 7 பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும் - 1	280	265
8.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 8 பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும் - 2	272	255
9.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 9 பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும் - 3	328	310
10.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 10 பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும் - 4	336	315
11.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 11 பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும் - 5	352	330
12.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 12 பட்டினத்துப் பிள்ளையார், காரைக்கால் அம்மையார் திருமுறை	384	360
13.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 13 திருக்குறள் விரிவுரை (பாயிரம்)	312	295
14.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 14 திருக்குறள் விரிவுரை (அறத்துப்பால் - இல்வாழ்க்கை இயல்)	304	285
15.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 15 தேசபக்தாமிர்தம், என் கடன் பணி செய்து கிடப்பதே, தமிழ்நாட்டுச் செல்வம், சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, தமிழ்க்கலை	432	405
16.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 16 தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப்பொழிவு	328	310
17.	திரு.வி.க. தமிழ்க்கொடை - 17 தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்திரட்டு-1	376	355

Scanned by CamScanner

		பக்கம்	விலை
18.	திரு.வி.க. தமிழ்க்கொடை – 18 தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்திரட்டு-2	360	355
19.	திரு.வி.க. தமிழ்க்கொடை – 19 இந்தியாவும் விடுதலையும்	280	265
20.	திரு.வி.க. தமிழ்க்கொடை – 20 சைவ சமய சாரம், நாயன்மார் திறம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், சைவத்தின் சமரசம், முருகன் அல்லது அழகு	320	300
21.	திரு.வி.க. தமிழ்க்கொடை – 21 கடவுட் காட்சியும் தாயுமானாரும், இராமலிங்க சுவாமிகள், திருவுள்ளம், தமிழ்நூல்களில் பௌத்தம், சைவத்திறவு, நினைப்பவர் மனம், இமயமலை அல்லது தியானம், ஆலமும் அமுதமும்	344	325
22.	திரு.வி.க. தமிழ்க்கொடை – 22 சமரச சன்மார்க்க போதமும் திறவும், சமரச தீபம், சித்த மார்க்கம், பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி	392	370
23.	திரு.வி.க. தமிழ்க்கொடை – 23 உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல், முருகன், அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், பொதுமை வேட்டல், கிறிஸ்துவின் அருள் வேட்டல், புதுமை வேட்டல், சிவனருள் வேட்டல்	424	400
24.	திரு.வி.க. தமிழ்க்கொடை – 24 கிறிஸ்து மொழிக்குறள், இருளில் ஒளி, இருமையும் ஒருமையும்	344	325
25.	திரு.வி.க. தமிழ்க்கொடை – அறிமுகம்	176	90
26.	திரு.வி.க. தமிழ்க்கொடை – முன்னுரைகள்	152	75

Scanned by CamScanner

முனைவர் இராசமாணிக்கனார் | மொத்தப் பக்கம் - 5168 | மொத்தத் தொகுதிகள் 39 (நூல்கள் 41) | மொத்த விலை 4180/-

இளையர் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், கல்வெட்டு, கோயிற்கலை, தமிழர் பிற கலைகள், புதினம், சிறுவர் இலக்கியம், என்று பல துறைகளில் படைக்கப்பட்ட நூல்கள். வளரும் தலைமுறைக்கு வழிகாட்டும் நூல்கள். மொழி - இனம் - நாடு இவற்றின் நலனை மூச்சாகக் கொண்டு எழுதப்பட்டவை. கண்டு கண்டு துய்த்து எழுதப்பட்ட கலைப் பெட்டகங்கள்.

		பக்கம்	விலை
1	20ஆம் நூற்றாண்டின் தமிழ்உரைநடை வளர்ச்சி	50	80
2	அருள் நெறி	70	112
3	அருவிகள்	65	104
4	எல்லோரும் வாழவேண்டும்	80	128
5	ஹர்ஷவர்தனன்	55	88
6	இலக்கிய அமுதம்	60	96
7	இந்திய பெரியார் இருவர்	55	88
8	இரண்டாம் குலோதுங்கன்	60	96
9	கதை மலர் மாலை	60	96
10	காவியம் செய்த கவியரசர்	60	96
11	மணிமேகலை	75	120
12	நாற்பெரு வள்ளல்கள்	50	80
13	நாட்டுக்கு நல்லவை	135	216
14	பல்லவப் பேரரசு	50	96
15	பூம்புகார் நகரம்	60	96
16	சேக்கிழார்	110	176
17	சிறுவர் கதைக்கொத்து	110	176
18	தமிழ்நாட்டு வடஎல்லை	60	96
19	அறிவுச் சுடர்	105	112
20	கம்பன் யார்?	90	96
21	ஆராய்ச்சிக் கட்டுரைகள்	120	128
22	வீரத் தமிழர்	90	96
23	தமிழ் நாட்டுப் புலவர்கள்	90	96
24	புதியத் தமிழகம்	65	72
25	மறைந்த நகரம், பொருநை	145	152
26	சேக்கிழார் ஆராய்ச்சி நூல்	120	128
27	தமிழக ஆட்சி	125	136
28	தமிழ் இனம்	95	104
29	என் றுமுள தென் றமிழ், வழியும் வகையும்	90	96
30	கல்வெட்டுக்களும் அரசியல் வரலாறும்	105	112
31	இராசேந்திர சோழன்	65	72
32	வழிபாடு	110	120
33	தமிழகக் கலைகள்	125	136
34	தமிழ்ப் புலவர் பெருமக்கள்	65	72
35	கட்டுரை மாலை	85	88
36	ஆற்றங்கரை நாகரிகம்	95	104
37	சிலப்பதிகாரக் காட்சிகள்	75	80
38	பத்துப்பாட்டு ஆராய்ச்சி	705	752
39	தமிழ்மொழி இலக்கிய வரலாறு	355	376

Scanned by CamScanner

பாவாணர் தமிழ்க்களஞ்சியம் | மொத்தப் பக்கம் - 9120 | மொத்தத் தொகுதிகள் 52 (நூல்கள் 61) | மொத்த விலை 6110/-

'மொழிஞாயிறு' என்று போற்றப்பட்டவர். தமிழே திராவிடத்திற்கு தாய், ஆரியத்திற்குமூலம் உலக முதன்மொழி என்பதை நிறுவியவர். தமிழ்மொழியை வடமொழி வல்லாண்மையிலிருந்து மீட்பதற்காக வாழ்நாள் முழுதும் உழைத்த மீட்பர். வேர்ச்சொல்லாய்வுத் தோன்றல். முப்பது மொழிகள் கற்ற ஒப்பிலாப் பேரறிஞர்.

		பக்கம்	விலை
1.	திருக்குறள் தமிழ் மரபுரை - அறத்துப்பால் 1	264	165
2.	திருக்குறள் தமிழ் மரபுரை - பொருட்பால் 2	160	100
3.	திருக்குறள் தமிழ் மரபுரை - பொருட்பால் 3	264	165
4.	திருக்குறள் தமிழ் மரபுரை - இன்பத்துப்பால் 4	216	135
5.	தமிழ் வரலாறு - பகுதி 1	208	130
6.	தமிழ் வரலாறு - பகுதி 2	152	95
7.	தமிழர் வரலாறு - பகுதி 1	152	95
8.	தமிழர் வரலாறு - பகுதி	184	115
9.	தமிழ் இலக்கிய வரலாறு - பகுதி 1	264	165
10.	தமிழ் இலக்கிய வரலாறு - பகுதி 2	96	60
11.	வடமொழி வரலாறு - பகுதி 1	192	120
12.	வடமொழி வரலாறு - பகுதி 2	184	115
13.	முதற்றாய்மொழி - பகுதி 1	176	110
14.	முதற்றாய்மொழி - பகுதி 2	160	100
15.	ஒப்பியன் மொழிநூல் - பகுதி 1	256	160
16.	ஒப்பியன் மொழிநூல் - பகுதி 2	192	120
17.	வேர்ச்சொற் கட்டுரைகள் - பகுதி 1	136	85
18.	வேர்ச்சொற் கட்டுரைகள் - பகுதி 2	184	115
19.	வேர்ச்சொற் கட்டுரைகள் - பகுதி 3	168	105
20.	வேர்ச்சொற் கட்டுரைகள் - பகுதி 4	168	105
21.	சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்	120	75
22.	கட்டுரை வரைவியல்	176	110
23.	உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதற் பாகம்)	280	175
24.	உயர்தரக் கட்டுரை இலக்கணம் (இரண்டாம் பாகம்)	232	145
25.	இயற்றமிழ் இலக்கணம்	160	100
26.	பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்	200	125
27.	பழந்தமிழாட்சி	152	95
28.	திரவிடத் தாய்	136	85
29.	தமிழர் மதம்	184	115
30.	மண்ணில் விண் (அ) வள்ளுவர் கூட்டுடைமை	240	150
31.	வண்ணனை மொழிநூலின் வழுவியல்	144	90
32.	தமிழ்நாட்டு விளையாட்டுகள்	160	100
33.	இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?	128	80
	தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?	120	75
34.	தமிழர் திருமணம்		
	தமிழர் சரித்திரச் சுருக்கம், தமிழன் எப்படிக் கெட்டான்?	168	105
35.	செந்தமிழ்க் காஞ்சி		
	இசையரங்கு இன்னிசைக் கோவை		
	சிறுவர் பாடல் திரட்டு, கிறித்தவக் கீர்த்தனம்		

Scanned by CamScanner

பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 1-52

		பக்கம்	விலை
36.	இசைத்தமிழ்க் கலம்பகம்	280	175
37.	சுட்டு விளக்கம்	96	60
38.	சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு	96	60
	என் அண்ணாமலைநகர் வாழ்க்கை		
39.	தென்சொற் கட்டுரைகள்	160	100
40.	மொழியாராய்ச்சிக் கட்டுரைகள்	128	80
41.	இலக்கணக் கட்டுரைகள்	152	95
42.	பண்பாட்டுக் கட்டுரைகள்	128	80
43.	தமிழியற் கட்டுரைகள்	200	125
44.	மொழிநூற் கட்டுரைகள்	112	70
45.	தலைமைத் தமிழ்	200	125
46.	தமிழ்வளம்	168	105
47.	பாவாணர் உரைகள்	120	75
48.	மறுப்புரை மாண்பு	152	95
49.	செந்தமிழ்ச் சிறப்பு	152	95
50.	பாவாணர் நோக்கில் பெருமக்கள்	88	55
51.	கட்டுரைக் கசடறை என்னும் வியாச விளக்கம்	96	60
52.	பாவாணர் கடிதங்கள், பாடல்கள்	416	260

தொல்காப்பியம்

மொத்தப் பக்கம் - 5432 | மொத்தத் தொகுதிகள் 15 (நூல்கள் 15) | மொத்த விலை 4760/-

தமிழில் தோன்றிய இலக்கண நூல்கள் அனைத்துக்கும் தாய்நூல். தனி மாந்தப் பண்பை முன்நிறுத்திப் பேசாது, பொது மாந்தப் பண்பை முன் நிறுத்திப் பேசும் தலையிலக்கணநூல். இந்திய மொழிகள் வரலாற்றில் வடமொழி மரபுக்கு வேறுபட்ட மரபுண்டு என்பதை உணர்த்தும் நூல். தமிழர் வாழ்வியல் இலக்கணத்தை வரையறுத்துக் கூறும் நூல். குறளுக்கு முப்பால் கொள்கை வகுத்தநூல். உலக மொழிகளில் முதல் இலக்கண நூல். வேறு எம்மொழிக்கும் இல்லாத சிறப்பாக கி.மு. 700-க்கு முன் உருவான தமிழ் இலக்கணம் தொல்காப்பியம். எழுத்து - சொல் - பொருள் மூன்றுக்கும் பண்டை உரையாசிரியர்கள் உரையுடன் வெளிவந்த நூல்.

		பக்கம்	விலை
1.	எழுத்ததிகாரம் - இளம்பூரணம்	330	352
2.	எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம்	380	408
3.	சொல்லதிகாரம் - இளம்பூரணம்	290	312
4.	சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியம்	405	432
5.	சொல்லதிகாரம் - சேனாவரையம்	360	384
6.	சொல்லதிகாரம் - தெய்வச்சிலையம்	320	344
7.	சொல்லதிகாரம் - கல்லாடம்	270	288
8.	பொருளதிகாரம் - இளம்பூரணம் 1	470	504
9.	பொருளதிகாரம் - இளம்பூரணம் 2	255	272
10.	பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் 1	425	456
11.	பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் 2	330	352
12.	பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் 3	275	296
13.	பொருளதிகாரம் - பேராசிரியம் 1	270	288
14.	பொருளதிகாரம் - பேராசிரியம் 2	380	408
15.	தொல்காப்பியம் சொற்பொருட் களஞ்சியம்		336

Scanned by CamScanner

உரைவேந்தர் தமிழ்த்தொகை	மொத்தப் பக்கம் - 12232	மொத்தத் தொகுதிகள் 28 (நூல்கள் 33)	மொத்த விலை 7645/-

சங்க இலக்கியங்களாகிய புறநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றுக்கு சிறந்த உரை எழுதிய உரைவேந்தர், சமய நூல்கள் பல தந்தவர். நூலுரை, திறனுரை, பொழிவுரை எனும் முவ்வரம்பாலும் தமிழுக்கு வளம்பல சேர்க்கும் நூல்களை எழுதியவர். அவரின் படைப்புகள் அனைத்தும் தமிழர் வாழ்வியலை மேம்படுத்தும் நூல்கள். கல்வெட்டு, செப்பேடு, மூல ஏட்டுச் சுவடி நலமெல்லாம் கொழிக்க நயவுரை கண்டவர். புலவர்கள் பெயர்கள், பாடல் விடுபாடுகள் என்பவற்றை நுனித்தறிந்து கண்டு ஒப்பிலா உரைகண்ட ஒண்டமிழர்.

		பக்கம்	விலை
1.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -1 ஞானாமிர்த மூலமும் பழையவுரையும்	504	315
2.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -2 சிவஞான போத மூலமும் சிற்றுரையும்	512	320
3.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -3 சிலப்பதிகாரச் சுருக்கம் - மணிமேகலைச் சுருக்கம்	472	295
4.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -4 சீவக சிந்தாமணிச் சுருக்கம்	360	225
5.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -5 சூளாமணிச் சுருக்கம்	224	140
6.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -6 பெருங்கதைச் சுருக்கம்	408	255
7.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -7 சிலப்பதிகார ஆராய்ச்சி -மணிமேகலை ஆராய்ச்சி - சீவகசிந்தாமணி ஆராய்ச்சி	440	275
8.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -8 யசோதர காவியம்	368	230
9.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -9 தமிழ் நாவலர் சரிதை	288	180
10.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -10 சைவ இலக்கிய வரலாறு	496	310
11.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -11 மாவை யமக அந்தாதி	184	115
12.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -12 பரணர் தெய்வப்புலவர் திருவள்ளுவர்	360	225
13.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -13 சேரமன்னர் வரலாறு	352	220
14.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -14 நற்றிணை - 1	520	325
15.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -15 நற்றிணை - 2	504	315
16.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -16 நற்றிணை - 3	448	280
17.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -17 நற்றிணை - 4	432	270
18.	உரைவேந்தர் தமிழ்த்தொகை 18 ஐங்குறுநூறு - 1	480	300
19.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -19 ஐங்குறுநூறு - 2	520	325

Scanned by CamScanner

உரைவேந்தர் தமிழ்த்தொகை (1-28)

		பக்கம்	விலை
20.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -20 பதிற்றுப்பத்து	672	420
21.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -21 புறநானூறு - 1	592	370
22.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -22 புறநானூறு - 2	648	405
23.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -23 திருக்குறள் தெளிவு (கட்டுரைகள்); பொதுமணித்திரள் (கட்டுரைகள்)	304	190
24.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -24 செந்தமிழ் வளம் – 1 (கட்டுரைகள்)	520	325
25.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -25 செந்தமிழ் வளம் – 2 (கட்டுரைகள்)	544	340
26.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -26 வரலாற்று வாயில் (கட்டுரைகள்)	392	245
27.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -27 சிவநெறிச் சிந்தனை – 1 (கட்டுரைகள்)	352	220
28.	உரைவேந்தர் தமிழ்த்தொகை -28 சிவநெறிச் சிந்தனை – 2 (கட்டுரைகள்)மீள் பதிப்பு நூல்கள்	336	210

தமிழிசைக்களஞ்சியம் (கருணாமிர்த சாகரம்)	மொத்தப் பக்கம் - 2172	மொத்தத் தொகுதிகள் 7 (நூல்கள் 7)	மொத்த விலை 4875/-

தென்னிந்திய, வடஇந்திய, உலக இசைகளுக்கு ஆதி இசை தமிழிசையே என்று நிறுவும் நூல். இசைத்தமிழ் நுட்பங்களையும் நாட்டிய தமிழ் வளங்களையும் அதன் பரப்புகளையும் தொன்மைகளையும் எடுத்துரைப்பன. ஆசிரியரின் கடும் உழைப்பால் எழுதப்பட்ட நூல். தம்மையும் தம்மக்களையும் இசையாய்வுக்கு உட்படுத்தி ஒவ்வொன்றையும் நேருற மெய்ப்பித்து பேரிசை வல்லார்க்கெல்லாம் வல்லாராய்த் திகழ்ந்த மேன்மையர்! தமிழ மருத்துவத் தகைமையர்.

		பக்கம்	விலை
1.	தமிழிசைக்களஞ்சியம் - 1	380	850
2.	தமிழிசைக்களஞ்சியம் - 2	424	950
3.	தமிழிசைக்களஞ்சியம் - 3	252	570
4.	தமிழிசைக்களஞ்சியம் - 4	268	600
5.	தமிழிசைக்களஞ்சியம் - 5	432	970
6.	தமிழிசைக்களஞ்சியம் - 6	220	440
7.	தமிழிசைக்களஞ்சியம் - 7	196	495

Scanned by CamScanner

பாவேந்தம் (பாரதிதாசன்) | மொத்தப் பக்கம் - 8614 | மொத்தத் தொகுதிகள் 25 (நூல்கள் 158) | மொத்த விலை 6645/-

தமிழ்- தமிழர் - தமிழ்நாடு மேன்மையுற வாழ்நாள் முழுதும் உழைத்தவர், எழுதியவர். பாவேந்தரின் பல்துறைப் படைப்புகளை ஒருங்கு திரட்டித் தொகுத்தும் பகுத்தும் பொருள்வழிப் பிரித்துக் காலவரிசையில் சீரிய தலைப்பில் வெளிப்படுத்திய இருபத்தைந்து தொகுப்புகள். முன்னைய நூல்களில் இடம்பெறாத படைப்புகள் பலவும் இடம்பெற்றவை. தமிழ்த் தேசிய இனத்தின் விடியலுக்கு ஓங்கிக் குரல் கொடுக்கும் நூல்கள். முதுமுனைவர். இரா. இளங்குமரனார், பாவேந்தத்தில் முழுதுறத் தோய்ந்த முனைவர். இரா. இளவரசு, முனைவர் கு. திருமாறன், முனைவர் பி. தமிழகன் ஆகிய பெருமக்களின் பேருழைப்பில் வெளிவந்த தொகுப்புகள்.

	பக்கம்	விலை
தொகுதி - 1 : இறைமை இலக்கியம் நாட்டுப் பாடல் இலக்கியம் 1. மயிலம் ஸ்ரீ ஷண்முகம் வண்ணப்பாட்டு 2. மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம் 3. மயிலம் சுப்பிரமணியர் துதியமுது 4. கதர் இராட்டினப் பாட்டு 5. சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் 6. தொண்டர்படைப் பாட்டு	288	190
தொகுதி - 2: காப்பிய இலக்கியம் - 1 1. எதிர்பாராத முத்தம் 2. பாண்டியன் பரிசு	264	165
தொகுதி - 3 : காப்பிய இலக்கியம் - 2 1. குடும்ப விளக்கு முதற் பகுதி (ஒருநாள் நிகழ்ச்சி) இரண்டாம் பகுதி (விருந்தோம்பல்) மூன்றாம் பகுதி (திருமணம்) நான்காம் பகுதி (மக்கட்பேறு) ஐந்தாம் பகுதி (முதியோர் காதல்) 2. இருண்ட வீடு	248	155
தொகுதி - 4 : காப்பிய இலக்கியம் - 3 1. காதலா? கடமையா? 2. தமிழச்சியின் கத்தி	248	155
தொகுதி - 5 : காப்பிய இலக்கியம் - 4 குறிஞ்சித்திட்டு	312	195
தொகுதி - 6 : காப்பிய இலக்கியம் - 5 1. கண்ணகிப் புரட்சிக் காப்பியம் 2. மணிமேகலை வெண்பா	432	270
தொகுதி - 7 : கதை, கவிதை, நாடக இலக்கியம் (சிறு காப்பியம்) 1. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் 2. புரட்சிக் கவி 3. பெண்கள் விடுதலை	272	170

Scanned by CamScanner

	பக்கம்	விலை
4. எது பழிப்பு?		
5. வெப்பத்திற்கு மருந்து		
6. கடவுளைக் கண்டீர்		
7. உரிமைக் கொண்டாட்டமா?		
8. வீட்டுக் கோழியும் காட்டுக் கோழியும்		
9. கற்புக் காப்பியம்		
10. நீலவண்ணன் புறப்பாடு		
11. இறைப்பது எளிது பொறுக்குவது அரிது!		
12. பச்சைக்கிளி		
13. திருவாரூர்த் தேர்!		
கவிதை நாடகங்கள்		
1. வீரத்தாய்		
2. கடல்மேற் குமிழிகள்		
3. நல்லமுத்துக் கதை		
4. அகத்தியன் விட்ட புதுக்கரடி		
